பக்கங்கள்:-18+07

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## புதிய ஆசிரியர்களை இணைக்க நடவடிக்கை



மாகாண சபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகளில் 8 ஆயிரத்து 139 ஆசிரியர் பற்றாக் குறை 03

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 09 | சனிக்கிழமை | 22.06.2024 | அதிர்வு 326



# சேறுபூசும் கீழ்த்தரத் தாக்குதல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை

## பொன்சேகாவுக்குச் சஜித் பதிலடி

“இன்றைய நிலவரப்படி, நாட்டின் அரசும் எதிர்க்கட்சியிலுள்ள வேலையாற்றத் தெரியாத சில கட்சிகளும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து பகிர்ந்து வருவது சரியில்லை. அவர்களைப் பொறுத்தவரை வளங்கள் இல்லாத இடத்துக்கு வளங்களை வழங்குவது தவறு என்றும் கருதுகின்றனர். அவர்கள், மக்களுக்கு நலன் பயக்கும் பிரபஞ்சம் மற்றும் மூச்சு ஆகிய புண்ணிய திட்டங்களுக்கு சேறுபூசி அதனை எதிர்த்து வருகின்றனர். இந்தச் சேறுபூசும் கீழ்த்தரத் தாக்குதல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 04

# 13 ஐ மீண்டும் நம்பி ஏமாற தமிழ் மக்கள் தயாரில்லை

## மொட்டுக் கட்சி எம்.பி. கூறுகின்றார்

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என்ற தென்னிலங்கை கட்சிகளின் உறுதிமொழிகளை மீண்டும் நம்பி ஏமாறுவதற்கு வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தயாரில்லை.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மேஜர் சுதர்ஷன தெனிபிடிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும், பொலிஸ், காணி அதிகாரங்கள்கூட வழங்கப்படும் என்று வடக்குக்குச் சென்று அநுரகுமார திஸாநாயக்கவும், சஜித் பிரேமதாஸவும் 03



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





### 30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட

# வடக்கு மக்களுக்கு புதிய அபிவிருத்தியை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்!

## அகில இந்திய பங்காளித்துவக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, இந்தியாவுடன் சிறப்பான பங்காளித்துவத்துடன் தொடர எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வலுசக்தித் துறை தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான பங்காளித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

அத்துடன், 30 வருடகால யுத்தததா ல் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு புதிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு ஐ.சி.ரி. ரத்னதீப ஹோட்டலில் நடைபெற்ற 31ஆவது அகில இந்திய பங்காளித்துவக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் 600 இற்கும் மேற்பட்ட இந்திய பங்காளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

"இலங்கையில் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவையும் இலங்கை மீதான உங்கள் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது. கடினமான கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் இந்தியா வழங்கிய 3.5 பில்லியன் டொலர் கடன் உதவி, எமக்கு பலமாக அமைந்தது. அந்தப் பணத்தை திருப்பித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பங்களாதேஷ் எங்களுக்கு வழங்கிய 200 மில்லியன் டொலர் கடனை நாங்கள் ஏற்கனவே செலுத்திவிட்டோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்கள் குழுவுடனான பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடித்துள்ளோம். எங்களின் உத்தியோகபூர்வ கடனாளிகள் குழு, அடுத்த வாரம் கூடவுள்ளது. எமக்கு கடன் வழங்கிய நாடுகளின் பிரதிநிதிகள், பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா ஆகிய தரப்பினரை சந்திக்க நாங்கள் தயாராக உள்ளோம். மேலும், சீனா மற்றும் சீனா எக்சிம் வங்கியுடனும் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

அதன் பிறகு, எங்களுக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும், சீனாவின் எக்சிம் வங்கியுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ள தயாராக உள்ளோம். அதன்படி, வரும் புதன் கிழமை உத்தியோகபூர்வ கடனாளிகள் குழுவை சந்திப்போம். அடுத்த வாரம் அல்லது அதற்குள், ஒரு நாடாக நாம் வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால் இத்துடன் இந்தப் பிரச்சினை முடிந்துவிடாது. நாட்டில் மீண்டும் ஒரு பொருளாதார சரிவைத் தவிர்க்க வேண்டுமாயின், புதிய பொருளாதார பொறிமுறைக்கு நாம் துரிதமாக மாற வேண்டும். அது ஒரு போட்டிமிக்க, டிஜிட்டல் ஏற்றுமதி சார்ந்த பசுமைப் பொருளாதாரமாக இருக்க வேண்டும். அது நமக்குள்ள இரண்டாவது பொறுப்பு. எனவே, இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை சட்டப்பூர்வமாக்க புதிய அணுகுமுறைக்குச் செல்ல முடிவு செய்தோம்.

மேலும், வெளிநாட்டு முதலீடு, ஏற்றுமதி வருமானம் மற்றும் பல பரிமாண வறுமையைக் குறைப்பதற்கான அளவுகோல்கள் அமைக்கப்பட வேண்டும். இப்பிராந்தியத்தில் அவ்வாறு செய்யும் முதல் நாடு இலங்கை என்று நான் நம்புகிறேன்.

ஒரு அரசு பொருளாதாரக் கொள்கையை முன்வைத்தவுடன், அடுத்து வரும் அரசு நிச்சயமாக அந்தக் கொள்கையை மாற்றியமைக்கின்றது. அப்போது நாம் ஒரு நாடாக முன்னேற முடியாது. நாங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பொருளாதார மாற்ற சட்ட மூலம், நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டுள்ளது. நாங்கள் தயாரித்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு மேலதிகமாக, முதலீட்டு சபையின் செயற்பாடுகளுடன் முழுமையான முதலீட்டு செயல்முறையையும் நிர்வகிக்கும் பொருளாதார ஆணைக்குழு போன்ற புதிய நிறுவனங்களும் இந்த சட்டத்தின் மூலம் நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது.

முதலீட்டு வலயங்களை முகாமைத்துவம் செய்ய ஒரு தனியான முகவர் நிறுவனம், நமது சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்த சர்வதேச வர்த்தக அலுவலகம், உற்பத்தித் திறன் மேம்பாட்டை உறுதி செய்ய தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழு மற்றும் பொருளாதாரம் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கான நிறுவனம் ஆகியவை இதில் அடங்கும்.

இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்படுத்த ஒப்புக்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்துவது குறித்து கடந்த வாரம் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடினேன். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் இது தொடர்பாக மேலும் கலந்துரையாட இலங்கைக்கு வருகை தந்தார்.

எதிர்கால அபிவிருத்தி இலக்கை அடைய, இலங்கை இந்தியாவுடன் சிறந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல எதிர்பார்க்கிறது. அதன்போது பல விசேட அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதில் முதலாவது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மின்சார விநியோக வலையமைப்புகளை ஒன்றோடொன்று இணைப்பதாகும். அப்போது இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு நிலைபேறான வலுசக்தியைக் கடத்தும் திறன் உருவாகும். அதன் மூலம் புதிய வருமானத்தைப் பெற முடியும். மேலும், இந்த ஜூலை மாதம் சாம்பூரில் சூரிய சக்தி திட்டத்தை ஆரம்பிக்க முடியும் என எதிர்பார்க்கிறோம்.

இந்தத் திட்டம் எங்கள் வலுசக்திக் கூட்டாண்மைக்கு அடிப்படையாக அமைவதோடு, மேலும் காற்றாலை மற்றும் சூரிய சக்திக்கான பாக்கு நீரிணையை அபிவிருத்தி செய்யவும் நாம் எதிர்பார்க்கின்றோம். இரு நாடுகளும் ஒன்றிணைந்து சூரிய ஒளி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான பாரிய அளவிலான மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக, யாழ் குடாநாட்டின் பிரதான துறைமுகமான காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சருடனான கலந்துரையாடலில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

இந்திய அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் பலாலி விமான நிலையம் மற்றும் கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தின் அபிவிருத்தித் திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ச்சி▼









தொடர்ச்சி▲

இலங்கையின் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, இந்தியாவின் அமுல் பால் நிறுவனத்துடன் இணைந்து, இந்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் குறித்தும் கவனம் செலுத் தப்பட்டது.

அத்துடன், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைமார்க்கமான தொடர்பை ஏற்படுத்துவதற்கான திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், திரு கோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவது குறித்தும் நாம் விரிவாகக் கலந்துரையாடினோம். திருகோண மலை அபிவிருத்தித் திட்டத்தில் கைத்தொழில்களுக்கான முதலீட்டு வலயங்களும் உள்ளடங்கும். அதேபோன்று சுற்றுலாப் வலயத்தையும் கொண்டுள்ளது. மேலும் நாகப் பட்டினத்தில் இருந்து திருகோணமலைக்கு எண் ணெய் குழாய் அமைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அது தொடர்பான இறுதி கண்காணிப்பு அறிக்கைக்காக காத்திருக்கி றோம்.

மேலும், திருகோணமலையை எண்ணெய் சுத்திக ரிப்பு மையமாக மாற்ற எதிர்பார்ப்பதுடன், துறைமுகங்கள் மற்றும் முதலீட்டு வலயங்களை நிர்மாணிப்பதன் மூலம் திருகோணமலை துறைமுகம் வங்காள விரிகுடாவில் ஒரு பிரதான துறைமுகமாக மாறும் என்றும் எதிர்பார்க்கப்படுகி றது. இன்று, முழு கிழக்கு கடற்கரையும் சுற்றுலாத்துறைக் காக திறக்கப்பட்டுள்ளது. காலி மற்றும் தெற்கு பிரதேசங்க ளில் ஹோட்டல்களுக்கு மேலதிக காணிகள் வழங்கப்படு கின்றன. நாட்டில் புதிய முதலீட்டு வலயங்கள் திறக்கப்படும். எமது தொழிற் பயிற்சித் திட்டமும் விரிவுபடுத்தப்படுகிறது. எனவே, இந்தத் திட்டங்களில் இந்தியாவுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகிறோம்.” – என்றார்.

# நாங்கள் அரசியல் யாசகர்கள் அல்லர்!

## ரணில் முன்னிலையில் சீறிய பஸில்

“நாங்கள் அரசியல் யாசகர்கள் அல்லர். நீங்கள் தனி வழி செல்வதாக இருந்தால்கூட எமக்கு பரவாயில்லை.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலை மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கடும் சீற்றத்துடன் பஸில் ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட கூட்டமொன்று ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ வதிவி டத்தில் நடைபெற்றுள்ளது.

அமைச்சர்களான நிமல் சிறிபாலடி சில்வா, பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்ற உறுப்பி னர்களான வஜிர அபேவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சாகல காரியவசம், பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட வர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அதனை எதிர்கொள்வது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்களை இணைத்துக்கொள்வதற்கு தாம் எதிர்ப்பு என நிமல் லான்சா அணி மற்றும் துமிந்த திஸாநாயக்க அணி என்பன தெரிவித்துள்ளன. 2015 ஜனாதிபதி தேர்த லின்போது வெளியில் இருந்து மைத்திரிபால சிறிசேன வுக்கு ஆதரவு வழங்கியதுபோல ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு தமது அணிகளுக்கு பிரச்சினை



இல்லை எனவும் மேற்படி தரப்புகள் அறிவித்துள்ளன.

இதனால் கடுப்பான பஸில் ராஜபக்ஷ, “ராஜபக்ஷக்கள் என்றால் யாரென நினைத்துக்கொண்டிருக்கின்றீர்கள்? ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப செயற்படுவதற்கு நாம் தயாரில்லை. நாம் அரசியல் யாசகர்கள் அல்லர். ஜனாதிபதி அழைப்பு விடுத்தால்தான் இந்தச் சந்திப்புக்கு வந்தேன். நாமல் உட்பட எமது கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதிக் கான ஆதரவை விலக்கிக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்ற போதிலும் நான் சந்திப்புக்கு வந்தேன். எமது அரசியலை நாம் தனியே செய்கின்றோம். எவ்வித பிரச்சினையும் இல்லை.” – என்று குறிப்பிட்டுள்ளார் என அறியமுடிகின்றது..

### 13 ஐ மீண்டும் நம்பி...

உறுதியளிக்கின்றனர். தேர்தல் நெருங்கு வதாலேயே இவ்வாறு உறுதிமொழி வழங்கப்படுகின்றது. ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை எதிர்க்கின்றனர்.

இவர்கள் என்ன கூறினாலும் மீண்டும் தமிழ் மக்கள் ஏமாறமாட்டார்கள். வடக்கு, கிழக்கு மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற் றுக்கொடுத்து, அபிவிருத்தியை ஏற்படுத் திய தலைவரே மஹிந்த ராஜபக்ஷ.” – என்றார்.

### புதிய ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலவுகின்றது என்று கல்வி அமைச் சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள் ளார்.

தற்போது நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக, ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மூன்றாண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஆசி ரியர்களின் எண்ணிக்கையும் எதிர்காலத் தில் இணைத்துக்கொள்ளப்படவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 11 ஆயி ரத்து 48 என்றும் அவர் கூறியுள் ளார்.

தேசிய பாடசாலைகளுக்கு 2 ஆயி ரத்து 500 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



## சேறுபூசும் கீழ்த்தரத் தாக்குதல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“மதுபான உரிமப் பத்திரம் கொடுத்தே அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துள்ளனர். சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதாக தெரிவித்து, விகாரைகளுக்கு முன்பாகவும் மதுபானசாலைகளை திறந்து வருகின்றனர். இது போன்ற கேவலமான டீல்களைச் செய்து கொண்டு பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களுக்கு சேறு பூசும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கணினிகளை விநியோகிப்பது அவர்களின் பார்வையில் தவறாகத் தோன்றி, பியர் அனுமதிப் பத்திரம் வழங்குவது தவறில்லாத ஒன்றாக தோன்றுகின்றது. அவர்கள் எமது அனைத்து அரசியல் கொள்கைகளையும் பணத்துக்குக் காட்டிக்கொடுத்துள்ளனர்.” – என்றும் அவர் சாடினார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 249 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், குருநாகல், யாப/ஹுவ, வலஸ்வெவ குணபால மலலசேகர மாதிரி பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸ தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:–

“டொலர்களுக்கும், வரப்பிரசாதங்களுக்கும், சலுகைகளுக்கும் அவர்கள் அவர்களது கொள்கைகளைக் காட்டிக் கொடுத்துள்ளனர். நாடு வங்குரோத்தடைந்து, மக்கள் வாழ்வு சீரழிந்துள்ள வேளையில், மக்கள் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினர் ஒன்று சேர்ந்து, மக்களுக்கு நலன் பயக்கும் பிரபஞ்சம் மற்றும் மூச்சு ஆகிய புண்ணிய திட்டங்களுக்கு சேறுபூசி அதனை எதிர்த்து வருகின்றனர். இந்தச் சேறுபூசும் கீழ்த்தரத் தாக்குதல்களுக்கு நாம் அஞ்சப்போவதில்லை.

இலவசக் கல்வியை பாதுகாப்போம் என்று கூறுபவர்களின் முட்டாள்தனமான கொள்கைகளால் இலவசக் கல்வி அழிந்து வருவதனால், இலவசக் கல்வியில் ஆங்கில மொழிக் கல்வியை விரிவுபடுத்த வேண்டும். இவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தாமல் கல்வியை மேம்படுத்த முடியாது.

இன்று நாடு முழுவதும் பட்டதாரிகள் வேலை கேட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு தனியார் துறையில் கூட வேலை கிடைப்பதில்லை. கலைப் பட்டம் அந்நிறுவனங்களுக்கு ஏற்றதல்ல என்றும் தெரிவித்துள்ளனர். இது குறித்து யாரும் பேசுவதில்லை.

சிங்களம் மட்டும், தமிழ் மட்டும் என்று கூறி தத்தமது வாக்கு வாங்கிகளை அதிகரித்துக் கொள்ளவே அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர். காலத்துக் காலம் அரசியல்வாதிகள் ஆட்சிப்பீடம் ஏறினாலும் 41 இலட்சம் மாணவ தலைமுறைக்கு ஏற்பட்ட மாற்றம் ஏதுமில்லை.

பாடசாலை கட்டமைப்புக்குத் தேவையான வளங்களை வழங்க முடியாத ஆட்சியின் மூலம் பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. இலவசக் கல்வியைப் பாதுகாப்பதாகக் கூறி பாத யாத்திரை செல்லும் தரப்பினர் இலவசக் கல்வி மேம்படுவதை ஒருபோதும் விரும்புவதில்லை.

புரட்சியாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் தரப்பினரின் பிள்ளைகள் தனியார் பாடசாலைக்கும் சர்வதேச பல்கலைக் கழகங்களுக்குமே செல்கின்றார்கள். அவர்களுக்குத் தனியார் கல்வி நல்லதாக இருந்தாலும் இலவசக் கல்வி நல்லதொன்றாக அமையவில்லை. இலவசக் கல்வியை மேம்படுத்த முயலும் போது, நாட்டின் ஏனைய பிள்ளைகளும் தமது பிள்ளைகளின் நிலைக்கு வருவார்கள் என்ற பொறாமைத்தன சிந்தனையுடனயே இவர்கள் சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.” – என்றார்.
















# நுவரெலியாவில் யோகா தின நிகழ்வுகள்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சுவாமி விவேகானந்தா கலாச்சார நிலையம், இந்திய தூதரகம், ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் ஆவெலியா, ஸ்ரீ சீதையம்மன் ஆலயம், நுவரெலியா பிரமகுமாரிகள் யோகா நிலையம் மற்றும் சிவா விஸ்ணு யோகா பீடம் ஆகியோரின் ஏற்பாட்டில் நுவரெலியா சினிசிட்டா உள் அரங்கில் யோகா நல்லிணக்க விசேட நிகழ்ச்சி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் சுனித்தா பீமேகெதர , ஆங்கில கல்வி உதவிப் பணிப்பாளர் சாந்தகுமார், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான இராஜாராம், சிவஞானம், சிவா விஸ்ணு யோகா பீட பணிப்பாளர் ராஜ்குமார் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.







# தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு பழ மரகன்றுகள் நடப்பட்டன

(றிஸ்வான் சாலிஹூ)

தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வார்த்தை முன்னிட்டு அக்கரைப் பற்று மேற்கு சமுர்த்தி வங்கி வளாகத்தில் பழ மரகன்று நடும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது வலய முகாமையாளர் யூ.கே. நழீம் ஒழுங்குபடுத்தலில் மாகாண விவசாய திணைக்கள பங்களிப்பில் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.சீ. எம்.தஸ்லீம் நெறிப்படுத்தலின் கீழ் இடம்பெற்றது. இதில் தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஃமத் துல்லா, கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குழந்தைகள், தாய்மார்கள் போஷாக்கு குறைப்பாடு தொடர்பாக விழிப்புணர்வு





(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்மார் கள் போஷாக்கு குறைப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டு வரு வதாக நுவரெலியா மாநகரசபை சுகாதார பிரிவினரால் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போஷாக்கு குறைப்பாடு காரணமா கப் பாதிக்கப்பட்டு வரும் குழந்தைகளின் பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்வு நுவரெலியா மாநகர சபை சுகாதார நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

நுவரெலியா சர்வோதய அமைப்பு மற்றும் யுனிசெப் நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மாநகரசபை சுகாதார நிலைய அதிகாரியின் தலைமையில் நடத்தப்பட்ட இந்த விழிப்புணர்வு நிகழ்வில் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது போஷாக்கு குறைப்பாட்டை நிவர்த் திக்கும் வகையில் ஊட்டச்சத்து நிறைந்த உணவு வகை கள் பல அறிமுகம் செய்யப்பட்டன. இதன் பயன்பாடு கள் தொடர்பில் கவனம் செலுத்த விழிப்புணர்வு செய்யப்பட் டது .

நுவரெலியா மாவட்டத்தில் அண்மைக் காலமாகப் போஷாக் குக் குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டுவரும் குழந்தைகள் மற்றும் தாய்மார் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வரும் நிலையில் இதில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெருந் தோட்ட பிரதேச தாய்மார்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு வரு வது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே இவர்களுக்கான போஷாக்கு தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்த யுனிசெப் நிறுவனம் முன் வந்து தோட்ட வாரியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.



# மாத்தளை மாவட்ட உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனானது மாத்தளை ஸாஹிராக் கல்லூரி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாத்தளை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலய மட்ட 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி மாத்தளை அஜ்மீர் தேசிய பாடசாலை அணிக்கும் மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலை அணிக்கும் இடையே மாத்தளை ஹிந்து தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாத்தளை மாவட்ட சம்பியனாகி மத்திய மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.



# கல்முனை அல் பஹ்ரியா ம. விக்கு கற்பித்தல் உபகரணங்கள் வழங்கல்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு நீண்ட நாள் தேவையாக இருந்த உபகரணங்கள் 2008 க.பொ.த. சாதாரண தர பிரிவு மாணவர்களால் வழிநடத்தப்படும் பஹ்ரியன் பிரீஸ் அமைப்பினாரால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால், ஆசிரியர் ஏ.ஆர்.எம்.முஸாஜித், ஆசிரியர் யூ.எல்.ரியால் ஆசிரியர் , பழைய மாணவர் சங்க செயலாளர் யூ.எல்.ஹாஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.




# பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பார்வையற்ற தம்பதி கௌரவிப்பு

(எம்.ஏ.அக்தார்)

பல்கலைக்கழக பட்டம் பெற்ற, பார்வையற்ற தம்பதியினருக்கு அவர்களது விடாமுயற்சியின் ஊடாகக் கல்விப்புலம் சார்ந்த சாதனையைப் பாராட்டிக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட மகளிர் விவகார குழுக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் , யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோஸ்தர், உளவளத்துணை உதவியாளர், யாழ். மாவட்ட மகளிர் விவகார சம்மேளன அங்கத்தவர்கள் மற்றும் யாழ். மாவட்ட செயலக உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# களைகட்டும் திருமலை பளிங்கு கடற்கரை!

(வி.ரி. சகாதேவராஜா)

திருகோணலை பளிங்கு கடற்கரை அண்மைக் காலமாக உல்லாச பயணிகளால் களைகட்டி வருகிறது.

கடந்த ஹஜ்ஜுப் பெருநாள் அன்று பெரும் எண்ணிக்கையான சுற்றுலா பயணிகள் அங்கு சென்றிருந்தனர்.

தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் அங்கு விஜயம் செய்து பொழுதைக் கழித்து வருகின்றனர்.

வெப்பமான காலநிலையை கருத்தில் கொண்டு அங்கு தினம் சுற்றுலா பயணிகள் அதிகரித்து அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# கல்லடி ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலய கும்பாபிஷேகம்!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க முருகன் ஆலயங்களுள் ஒன்றான ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை வள்ளி,தெய்வானை சகிதம் முருகப் பெருமானுக்கும் பரிபால தெய்வங்களுக்கும் நிகழ்த்தப்பட்டது.

இந்தத் திருநெறிய தெய்வத் தமிழ் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அகில பாரதீய சன்னியாசிகள் சங்கத் தலைவரும் கேந்திரிய மாருக தர்ஷன் அறங்காவலரும் மற்றும் பேரூர் ஆதின 25 ஆவது குருமார் சந்நிதானங்களுமாகிய முதுமுனைவர் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாச்சர அடிகளார் தலைமையில் அவரது சீடர்கள், மதுரை தெய்வச் செந்நெறிக் கழகத்தின் தலைவர் பூச்சிய ஸ்ரீசிவானந்த சுத்தானந்த மகராஜ்ும் அவரது சீடர்களும், திருநெல்வேலி பறசமய கோறளி நாத ஆதீனக் குருமார் சந்நிதானங்கள், தர்மபுரம் ஆதீன திருக்கேதீச்சரம் கட்டளை விசாரணை ஸ்ரீமீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், திருவெண்ணாமலை சடைச்சாமி ஆச்சிரமத்தின் 5 ஆவது மடலாதிபதி தவத்திரு திருப்பாத சுவாமிகள், இலங்கையைச் சேர்ந்த மட்டக்களப்பு இராம



கிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் நீலமாதவானந்தாஜீ மற்றும் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்தி வைத்தனர்.

இந்தப் பெருவிழாவைக் காண மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலாபக்கமும் இருந்து பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் வருகை தந்திருந்தனர்.



We are HIRING
# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

Walk-in-interview on 22-06-2024
between10.00 am to 12.00 noon



**IIS CITY CAMPUS**
No-655, Navalar Road, Jaffna.
021 222 8060 | 077 666 0054 | www.iis.edu.lk

IIS CITY CAMPUS



Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எரியும் ஊழல்

நாடு பொருளாதார சிக்கலில் மாட்டியுள்ளது என்பதற்கான முதல் சமிக்ஞை - பாதிப்பின் வெளிப்பாடு - எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் கிலோ மீட்டர் கணக்கில் நீளும் வாகன வரிசையில் இருந்து புலப்படும்.

பொருளாதார நெருக்கடியின் இறுக்கத்தையும் தணிவையும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்னால் காணப்படும் நெருக்கடியை வைத்து அளவிட்டு விட முடியும்.

நாட்டின் பொருளாதாரம் இத்துணை மோசமான கட்டத்தை எட்டியமைக்குப் பிரதான காரணங்களில் முக்கியமானவை லஞ்சம், ஊழல், மோசடி, நிர்வாகச் சீர்கேடு ஆகியவைதான்.

பொருளாதாரப் பாதிப்பை வெளிப்படுத்தும் எரிபொருள் விநியோகத்தில் இந்த ஊழல், மோசடி, நிர்வாகச் சீர்கேடு போன்றவை உச்சமாகக் குடி கொண்டிருக்கின்றன.

இதில் வேதனை என்னவென்றால் சுமார் கால் நூற்றாண்டு காலமாக இந்த எரிபொருள் விநியோகத் துறையில் கண்ணுக்கு முன்னால் ஊழலும் மோசடியும் சூறையாடலும் தலைவிரித்தாட, நாடும் சமூகமும் சட்ட ஒழுங்கு துறையும் அதை தடுக்க இயலாமல் வாளாவிருந்தமைதான்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் எரிபொருள் கொள்வனவு தொடர்பில் அமைச்சரவைக்கோ, பொதுமக்களுக்கோ பகிரங்கப்படுத்தாமல் சில பிரகிருதிகள் வெளிநாட்டு வங்கிகளுடன் சத்தம் சந்தடியின்றி முன்னெடுத்த 'ஹெட்ஜிங்' பேர ஊழல் காரணமாக 162 மில்லியன் டொலருக்கும் (தற்போதைய பெறுமதியில் சுமார் பத்தாயிரம் கோடி ரூபாவுக்கும்) அதிக தொகையை நாடு வீணே வெளிநாட்டு வங்கிக்கு செலுத்த வேண்டியதாயிற்று. அந்தக் கடன் பொறுப்பு இன்னமும் செலுத்தி முடிந்ததோ தெரியவில்லை.

அதற்குள் மீண்டும் இத்துறையில் மற்றொரு ஊழல், முறைகேடு தொடர்பான விடயம் அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

அண்மை காலத்தில் 3.5 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நஷ்டத்தை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படுத்திய அதிகாரிகள் நாட்டை விட்டுத் தப்பி வெளியேற இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபன நிர்வாகிகளும் இதுவரை இருந்த அமைச்சர்களும் நடவடிக்கை எடுக்காமல் பார்த்திருந்தனர் எனப் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழு ('கோப்' குழு) முன் நேற்றுத் தெரியப் படுத்தப்பட்டிருக்கின்றது.

முன்னர் நடந்த ஹெட்ஜிங் பேரம் நேரடியாக எரிபொருள் கொள்வனவில் நடந்த ஊழல். இப்போது கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருளை மக்களுக்கு விநியோகிப்பதில் பெரும் முறைகேடு நடைபெற்றிருப்பதாகச் சுட்டப்படுகின்றது.

எரிபொருள் பாவனையாளர்களையும் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தையும் சேர்த்து எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் சூறையாடிச் செல்வதற்கான முறைமையை - வசதியை - வாய்ப்பை - பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தும் பிரிவு கனகச்சிதமாக முன்னெடுத்தமை பற்றிய விவரங்களே கோப் குழுவின் முன்னால் நேற்று அம்பலமாகி இருக்கின்றன.

விநியோகஸ்தர்களுக்கு முறையற்ற விதத்தில் அதிக தரகுப் பணம் கிடைப்பதைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையை வெளியிடாமல் கூட்டுத்தாபனத்தின் தலைமை நிர்வாகம் வேண்டும் என்றே இழுத்தடித்தது எனவும் -

இதனால் பாவனையாளர்களான பொதுமக்களுக்கும் மற்றும் கூட்டுத்தாபனத்துக்கும் பெரும் நஷ்டமும் பாதிப்பும் இழப்பும் ஏற்பட்டமைக்கு கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தும் பிரிவும் தலைமை நிர்வாகமும் காரணம் என கோப் குழு ஆய்வில் அம்பலமாகியிள்ளது.

தேவையற்ற அதிக செலவினங்கள் எரிபொருள் பாவனையாளர்கள் மீது கட்டியடிக்கப்படும் விதத்தில் அதிக சுமை பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டமை இப்போது வெளிப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி 2014 முதல் 2022 வரை 8 வருடங்களும் 8 மாதங்களும் இப்படி மேலதிக சுமை எரிபொருள் பாவனையாளர் மீது தேவையற்று சுமத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்த வருமானத்தை எரிபொருள் விநியோகஸ்தர்கள் சூறையாடினர். அவர்கள் மூலம் பெட்ரோலியக் கூட்டுத்தாபன மேலிட நிர்வாகிகள் பயன் பெற்றனர் என்றும், இந்த ஊழல் அம்பலத்துக்கு வருவதை அடுத்து பொறுப்பான அதிகாரிகள் பலரும் வெளிநாட்டுக்குத் தப்பிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

எரிபொருள் துறையின் ஊழல் நாட்டை எரிக்கும் விவகாரமாகியிருக்கின்றது.



# ஆரையம்பதி பிரதேசத்தில் பயறு அறுவடை நிகழ்வு!

(பழுவூரான்)

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலர் பிரிவில் கமத்தொழில் அமைச்சால் மானியமாக வழங்கப்பட்ட பயறு அறுவடை நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

மண்முனைப்பற்றுப் பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஷின் தலைமையில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஒழுங்குபடுத்தலுடன் கிரான்குளம் கிராம உத்தியோகத்தர் பகுதியில் இந்த அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் விவசாயப் போதனாசிரியர், கமநல சேவை அபிவிருத்தி, கிராம சேவைகள், பொருளாதார அபிவிருத்தி, பிரதேச செயலக அபிவிருத்தி, சமுர்த்தி அபிவிருத்தி ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், மேட்டுநில கமநல அமைப்பு மற்றும் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# மட்டு. சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்!





(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டமானது உதவி மாவட்ட செயலாளர் ஜீ.பிரணவன் தலைமையில் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் மதிராஜ் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

"சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கான சுபிட்சமாக எதிர்காலத்தை உருவாக்க வேண்டும்" என்பதை நோக்காகக் கொண்டு மாவட்ட செயலகம் மற்றும் செரி நிறுவனத்துடன் இணைந்து சிறார்களை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இதன் போது உயர் அதிகாரிகளால் சிறார்களை மேம்படுத்துவதற்குத் தேவையான விடயங்கள் தொடர்பாகவும் சிறார்கள் எதிர்நோக்கும் சவால்களை சமூகமாகக் கையாள்வதற்குத் தேவையான விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் சிறுவர்களுக்காக கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு தரவுத் தளத்தை உருவாக்கி அத்தளத்தை மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் கண்காணித்து வினைத்திறனாக செயற்படுவதற்கான திட்ட கலந்துரையாடல் இதன்போது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், செரி நிறுவனத்தின் பிரதி தேசிய இயக்குனர் எல்.ரூக்சான், மாவட்ட செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# கல்முனை சுகாதாரப் பணிமனையில் கண்காணிப்பு, மதிப்பீட்டுப் பிரிவு திறப்பு

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புதிதாக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பிராந்திய பணிப்பாளர் நாடாவெட்டி புதிய பிரிவைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை பிராந்தியத்தில் சுகாதார ரீதியாக மேலும் பல்வேறு பணிகளை முன்னெடுப்பதற்கு குறித்த பிரிவு ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட மாநாடு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட விவசாயிகள் மாநாடு தெஹியத்தகண்டியில் அனுர திஸாநாயக்கா தலைமையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, கல்முனை , அம்பாறை மற்றம் பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த மூவின மக்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.



# யாழ். மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்!

(த.சுபேசன்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நிகழ்வானது கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் அடையாள படுத்தபட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அதற்கு உள்ளடங்கலான தீர்வுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகளுடன் முன்னோக்கி செல்லுதல் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் வடக்கு மாகண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீஷன் , யாழ். மாவட்ட உதவிச் செயலாளர் உ. தர்சினி , பிரதேச செயலர்கள், பல் துறை சார் அரச உயர் அலுவலர்கள் , கிறிசலிஸ் நிறுவன சிரேஷ்ட திட்ட இணைப்பாளர், பால் நிலை கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசகர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், ஒன்றியத்தின் உறுப்பினர்கள் , யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







# இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(ஆ.ரமேஸ்)

இந்திய அரசின் நிதி உதவி ஊடாக மலையக பெருந்தோட்ட பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டுள்ள 106 தனி வீடுகளுக்கான நினைவு படிகங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் முழுமைப்படுத்தப்பட்ட 106 வீடுகளுக்கான நினைவுப் படிகங்களை இவர்கள் கூட்டாக மெய்நிகர் (Virtual) ஊடாக திறப்பு விழா செய்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து கொண்டு மலையக மக்களுக்கான தேவைப்பாடுகளை எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நிறைவேற்றிவரும் இந்திய அரசுக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.



# மடு ஆடி பெருவிழாவை முன்னிட்டு அரச அதிபர் மடுவுக்கு களப் பயணம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மருதமடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட யூபிலி ஆண்டாக இந்த ஆடிப் பெருவிழா அமைந்துள்ளமையால் மடு அன்னையின் ஆடிப் பெருவிழா யூபிலி ஆண்டு பெருவிழாவாக அமைந்துள்ளது.

இதை முன்னிட்டு திருஅவை முக்கியஸ்தர்கள், அரசியல் தலைவர்கள் வருகைதர இருப்பதால் பாதுகாப்பு மற்றும் ஏனைய ஒழுங்குகளை கவனிக்கும் முகமாகவும் வனவள திணைக்களத்தின் முறையற்ற செயற்பாடு காரணமாகவும் மன்னார் அரச அதிபரின் தலைமையில் கள விஜயம் இடம்பெற்றது.

மன்னார் மருதமடு அன்னையின் ஆடித் திருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையிலான் குழு மடு பகுதிக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்தது.

இதில் மடுப்பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் சுகாதார திணைக்களத்தினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், வனவள துறையினர், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் இந்தக் கள விஜயத்தில் கலந்து கொண்டனர்.

இங்கு மடு வீதி தொடக்கம் மடு வரையான வீதி துப்பரவு பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்தக்காரர்கள் ஈடுபட்டபோது வனவள துறையினர் முறையற்ற விதத்தில் நடத்தியதாக மடு பரிபாலகர் மற்றும் பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் தெளிவுப்படுத்தினர். வனவள திணைக்களம் அதற்கு இணங்காத நிலை காணப்பட்டமையாலேயே இக்கள விஜயம் இடம்பெற்றது.

இந்த மடு வீதி துப்பரவு செய்யும் விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் வனவள துறையினருக்கும் இடையே தீர்வு எட்டப்படாத காரணத்தால் இந்த விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதன்போது மடு ஆலயப் பகுதியில் வானூர்தி இறங்குத் தளம், பாலம்பிட்டி வீதி இவற்றுக்கு அருகாமையிலுள்ள பற்றைக் காடுகளை துப்பரவு செய்து கடைகள் அமைப்பது போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

பாலம்பிட்டி வீதிக்கு அருகாமையில் வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்கு பொலிஸ் தரப்பினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் இங்கு சனத் தொகை அதிகமாக காணப்படும் என்பதால் இது கைவிடப்பட்டது.

கோயில் வளாகத்தில் அமைந்துள்ள மலசல கூடங்கள், யாத்திரிகர் தங்குமிடம் அமைக்கும் இடங்கள் போன்றன மடு பரிபாலகரால் இந்தக் கள குழுவினருக்கு காண்பிக்கப்பட்டது.

பரப்புக்கடந்தான் வீதி எவ்வித துப்பரவு செய்யப்படாது காணப்பட்டமையால் இவ்வீதி திருத்தம் தொடர்பாக வனவள துறையினர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டது.







# ஓவியக் கண்காட்சி கிண்ணியாவில்

(அஷ்ரப் ஏ சமத்)

கிண்ணியா பிரபல ஓவிய ஆசிரிய ஆலோசகர் சகீல் கைவண்ணத்தில் இயற்கையாக நேரடியாக வரையப்பட்ட ஓவியக் கண்காட்சி கிண்ணியா மத்திய கல்லூரியின் அப்துல் மஜீத் மண்டபத்தில் இன்று 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியைப் பொது மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இலவசமாக கண்டுகளிக்க முடியும் என்று ஓவிய ஆசிரியர் அழைப்பு விடுத்துள்ளார்.



# பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரித்தது ஆர்மீனியா

ஐரோப்பிய நாடுகள் பலவும் பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் அளிப்பதே பாலஸ்தீனம்-இஸ்ரேல் மோதலுக்கு தீர்வாகும் என்ற முடிவை முன்மொழிந்து வருகின்றன.

இந்நிலையில், ஆசிய நாடான ஆர்மீனியா பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக ஆர்மீனியாவின் வெளியுறவு அமைச்சகம் கூறுகையில், இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையிலான மோதலை தீர்க்க பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதே தீர்வாகும் என தெரிவித்துள்ளது.




ஏற்கனவே அயர்லாந்து, ஸ்பெயின், நோர்வே ஆகியவை பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளன.

முன்னதாக கடந்த 2011 ஆம் ஆண்டிலேயே பாலஸ்தீனம் ஒரு நாடாக செயல்படுவதற்கான தகுதி பெற்றுள்ளதாக உலக வங்கி தெரிவித்திருந்ததாக ஆர்மீனியாவின் வெளியுறவு அமைச்சகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா ராபா உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேல் கடந்த 9 மாதமாக நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 37 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள்எனதெரிவிக்கப்படுகிறது.





# ரஃபாவின் பாதுகாப்பு வலயத்துக்குள் தீவிர தாக்குதலை தொடரும் இஸ்ரேல்

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தால் பாதுகாப்பான வலயமாக நியமிக்கப்பட்டுள்ள காசாவின் முக்கிய பகுதிக்குள் இஸ்ரேல் இராணுவ தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் தஞ்சம் புகுந்துள்ள மிகச்சிறிய நிலப்பகுதியான அல்-மவாசியில் இந்த தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என கூறப்படுகிறது.

இஸ்ரேலிய தாக்குதல்கள் அல்-மவாசியில் திடீர் மற்றும் எதிர்பாராத ஊடுருவலை மேற்கொண்டதாகவும், வெளியேற்றும் மையங்கள் மற்றும் தற்காலிக கூடாரங்களை நோக்கி ஏராளமான பீரங்கி குண்டுகளை வீசியதாகவும் காசாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இது கள மருத்துவமனைகள் நிறுவப்பட்ட இடம் என்றும் மற்றும் மனிதாபிமான அமைப்புகளுக்கான மையம் எனவும் கூறப்படுகிறது.

ரஃபாவில் இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்துவது குறித்த அமெரிக்காவின் அனைத்து எச்சரிக்கைகளையும் மீறி, இஸ்ரேலிய துருப்புக்கள் ரஃபா மேற்குப் பகுதிக்கு ஒரு பகுதியில் தாக்குதல்களை தற்போது தொடர்ந்துள்ளது.

# இஸ்ரேல் இராணுவத்தின் வான்வழி தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் உயிரிழப்பு

காசா வடக்கு எல்லை பகுதியான பெய்ட் ஹனௌனில் நடத்தப்பட்ட வான்வெளி தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் மூத்த தளபதியொருவர் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் ஸ்னைப்பர் பிரிவுக்கு தலைமை வகித்த அகமது அல் சவர்கா இராணுவ போர் விமானம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேலின் இராணுவ செய்தி தொடர்பாளர் அவிச்சே அட்ரே கூறியுள்ளார்.



இந்த நிலையில் இஸ்ரேலிய படைகளுக்கு எதிராக பயங்கரவாத தாக்குதல்களில் அகமது அல் சவர்கா முக்கிய பங்கு வகித்து வந்தார் என குறிப்பிடப்படுகிறது.

மத்திய காசா மற்றும் தெற்கு ரஃபா பகுதிகளில் ஹமாஸ் அமைப்பை அழிக்கும் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன என இஸ்ரேல் பாதுகாப்பு படைகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல் குறித்து காசாவில் உள்ள சுகாதார துறை அதிகாரிகள் கூறும் போது, இதுவரை பாலஸ்தீனம் சார்பில் 37 ஆயிரத்து 431 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் படுகாயமடைந்தவர்கள் எண்ணிக்கை 85 ஆயிரத்து 653 ஆக அதிகரித்து உள்ளதாக தெரிவித்தனர்.

# கள்ளச் சாராய விவகாரத்தில் தி.மு.கவுக்கு தொடர்பு உள்ளது

## சி.பி.ஐ. விசாரணை தேவை என்கிறார் இ.பி.எஸ்.





"சட்டப்பேரவையில் இருந்து இன்றும் அ.தி.மு.க. வெளிநடப்பு செய்தது. அதன் பின்னர், எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி, கள்ளச் சாராய மரணங்களுக்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரின் 3 ஆம் நாள் இன்று தொடங்கி நடைபெற்றது. நேற்றைய தினம் போலவே அ.தி.மு.க. நிர்வாகிகள் இன்றும் கருப்பு உடை அணிந்தவாறு சட்டப்பேரவைக்கு வருகை தந்தனர். தொடர்ந்து சட்டப்பேரவை தொடங்கிய நிலையில், கேள்வி நேரத்துக்கு முன்பாகவே அதிமுகவினர் கள்ளச் சாராய சம்பவத்துக்கு நீதி கேட்டு அமளியில் ஈடுபட்டனர்.

கேள்வி நேரத்தை ஒத்திவைத்து கள்ளச் சாராய மரணங்கள் தொடர்பாக பேச வேண்டும் என்று அ.தி.மு.கவினர் கோரிக்கை வைத்த நிலையில், நினைத்ததை நினைத்த நேரத்தில் பேச முடியாது என்றும் பேச வேண்டிய நேரத்தில் பேச அனுமதி தருகிறேன் என்றும் பேரவைத் தலைவர் அப்பாவு தெரிவித்தார். இதனால் அ.தி.மு.கவினர் சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

அப்போது கள்ளச் சாராய மரணங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் பதவி விலக வேண்டும் எனவும் கோஷமிட்டவாறு வெளியேறினர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி,

"கள்ளக்குறிச்சியில் நடந்த கள்ளச் சாராய மரணங்கள் குறித்து எதிர்க்கட்சி என்கிற முறையிலும், மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்னும் அடிப்படையிலும், சட்டப்பேரவையில் மக்களின் பிரச்சினையை பேசுவதற்கு அனுமதி கேட்டோம். பல முறை குரல் கொடுத்தோம். ஆனால், சட்டப்பேரவைத் தலைவர் பேசுவதற்கு அனுமதி மறுத்துவிட்டார்.

இது மக்களின் உயிர் பிரச்சினை. தினந்தோறும் மக்கள் இறந்து கொண்டே இருக்கின்றனர். இதைவிட பெரிதாக விவாதிக்க என்ன இருக்கிறது? இதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன? எத்தனை பேர் மது அருந்தி உள்ளனர்? இதுவரை எத்தனை பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்? அவர்களின் நிலை என்ன? எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர்? இந்த விவரங்களை எல்லாம் அரசின் கவனத்துக்கு கொண்டு வந்து மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் பேச அனுமதி கோரினோம். ஆனால், இன்றைக்கும் எங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது.

இன்றைய தினம் வரை கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயத்தால் 183 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 55 பேர் உயிரிழந்து இருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அந்த வகையில் இறப்புகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் அரசோ, மெத்தன போக்கில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அரசு வேகமாக செயல்பட்டிருந்தால் பல உயிர்களை காப்பாற்றி இருக்கலாம். அதே போல நேற்றைக்கு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்ற சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஒமிபிசோல் விஷமுறிவு ஊசிக்குப் பதிலாக ஓமிபிரசோல் எனும் அல்சருக்கு பயன்படுத்தப்படும் மருந்து குறித்து பேசியிருக்கிறார்." - என்றார்.

# மக்கள் பணியில் வெற்றிகொள்வதற்கு முனைந்துள்ள விஜய்க்கு வாழ்த்துகள்

## சீமான் தெரிவிப்பு





"காலங்காலமாய் ஏமாளிகளாய் வாழும் சாமானிய மக்களின் வாழ்வில் சரித்திர மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக அரசியலில் அடியெடுத்து வைத்து, மக்கள் பணியில் தம்மை ஈடுபடுத்தி, வெற்றிகொள்ள முனைந்துள்ள விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்."

- இவ்வாறு நாம் தமிழர் கட்சியில் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தமிழக வெற்றிக் கழக தலைவரும் நடிகருமான விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார், இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"4தமிழ்த்திரையுலகில் தன் திறமைமிக்க நடனம், உரையாடல், உச்சரிப்பு, உடல்மொழி, சண்டைக்காட்சிகள் என அனைத்திலும் தன்னுடைய ஆற்றலைப்பெருக்கி, ஆகச்சிறந்த நடிப்புத்திறனால் இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் முதல் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள சின்னஞ்சிறு குழந்தைகள் வரை அனைத்துத்தரப்பு மக்களின் மனங்களையும் வென்று, தமிழ்நாட்டு மக்கள் தங்கள் குடும்பத்தில் ஒருவராக நினைக்கும் அளவிற்கு, எல்லோரது நேசத்தையும் பெற்று உச்சம்தொட்டு உயர்ந்து நிற்கும் அன்புத்தம்பி.

காலங்காலமாய் ஏமாளிகளாய் வாழும் சாமானிய மக்களின் வாழ்வில் சரித்திர மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக அரசியலில் அடியெடுத்து வைத்து, மக்கள் பணியில் தம்மை ஈடுபடுத்தி, வெற்றிகொள்ள முனைந்துள்ள, எனதருமை இளவல், எனது அன்புத்தளபதி, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர், என்னுயிர்த் தம்பி விஜய் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துகள்." - என்று குறிப்பிட்டுள்ளார்.

பக்கங்கள் 07

கனடா முரசு

சனிக்கிழமை 22/06/2024

## 7 வாகனங்கள் மோதுண்டு நெடுஞ்சாலையில் விபத்து

ஒன்ராரியோ, ஜூன் 22 டொரன்டோ நகரில் நெடுஞ் சாலை 401இல் ஏழு வாகனங்கள் விபத்துக்குள்ளானமையில் மூவர் காயமடைந்துள்ளனர்.

ஜூன் 20ஆம் திகதி C2



# திங்களன்று நடக்கும் இடைத்தேர்தலின் முடிவுகள் வரும் பொதுத்தேர்தல் முடிவுகளைப் பிரதிபலிக்கும்

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நம்பிக்கை

ரொறன்ரோ சென்ட் போல்ஸ் தொகுதியில் எதிர்வரும் திங்கள்கிழமை இடம் பெறும் இடைத்தேர்தல் முடிவுகள் வரும் பொதுத்தேர்தல் முடிவுகளின் பிரதிபலிப்பாக அமையும் என கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இந்த இடைத்தேர்தல் முடிவுகள் எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள பொது தேர்தல் முடிவுகளின் பிரதிபலிப்பாக கருதப்பட முடியும் என பிரதமர் சுட்டிக்காட்டி உள்ளார். C3

# முகநூல் கொடுக்கல் - வாங்கலில் 6,000 டொலர்களை இழந்த யுவதி

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் முகநூல் ஊடாக மேற்கொண்ட கொடுக்கல் - வாங்கல்களின் போது 6,000 டொலர்களை இழக்க நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எமென்டா மசோடா சூசா என்ற பெண் இவ்வாறு பணத்தை இழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முகநூல் சந்தையின் ஊடாக இந்தப் பெண் பொருள்களை விற்பனை செய்து வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

40 டொலருக்குப் பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்கிறார் என வாடிக்கையாளர் ஒருவர் அனுப்பிய தகவலை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பெண் தமது தகவல்களை வழங்கியுள்ளார்.

அதைப் பயன்படுத்தி அந்தசொ பெண்ணின் வங்கி கணக்கிலிருந்து 6,000 டொலர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. C3





# பூர்வீகக்குடிகளின் அடையாள மோசடி சிக்கல்; அமைச்சர் ஆனந்தசங்கரி கருத்து வெளிப்பாடு

ஒன்ராரியோ, ஜூன் 22

பூர்வீகக்குடிகளின் அடையாள மோசடி என்று அழைக்கப்படுபவை பற்றிய விவாதங்கள் அரசாங்க வரையறை குறித்த அச்சங்களை அடிப்படையாகக் கொண்டவை என்று பூர்வீகக்குடிகள் நலன்கள் தொடர்பான அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

"சுதேசி அடையாளம் பற்றிய கருத்து வெளிப்படையாக மிகவும் சிக்கலானது. மற்றும் பல நூற்றாண்டு காலனித்துவத்துடன் அது தொடுக்கப்பட்டுள்ளது" என்று கெரி ஆனந்தசங்கரி வியாழன் அளித்த பேட்டியில் கூறினார்.

'ஒரு பழங்குடி நபர் என்றால் யார், யார் அதில் இல்லை என்பதை வரையறுப்பது உண்மையில் மத்திய அரசாங்கத்தின் பங்கு அல்ல' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பூர்வீக உரிமைகளுக்கான அங்கீகாரம் பெரும்பாலும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து வருவதால், அவரும் சுதேச சேவைகள் அமைச்சர் பாட்டி ஹஜ்துவும் கூட்டாட்சி அங்கீகாரம் பெற்ற பழங்குடியின மக்கள் - முதல் நாடுகள், இன்யூட் மற்றும் மெடிஸ் ஆகிய மூன்று குழுக்களிடமிருந்தும் அதிக அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

'எந்தவொரு உறவுக்கும் நிலையான உழைப்பும் உரையாடல்களும் தேவை' என் அமைச்சர் ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

ஒன்ராரியோ, ஆல்பர்ட்டா மற்றும் சசகெச்சுவானில் உள்ள மெடிஸ் அரசாங்கங்களை அங்கீகரிக்க முற்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய சட்டமூலத்துடன், கடந்த இலையுதிர்காலத்தில், நாடாளுமன்றத்தில் அடையாள மோசடி குறித்து தலைப்பு வெளிவந்தது.




## 7 வாகனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் படுகாயமடைந்த நிலையிலும், மேலும் இருவர் சிறிய காயங்களுடனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணத்தை அறியும் வகையில் விசாரணைகள் தொடர்வதாக ஒன்ராரியோ மாகாண பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# ஒரு குடும்பத்தில் நான்கு பேர் வீட்டில் சடலங்களாக மீட்பு!

## தென்மேற்கு ஒன்றாரியோவின் ஹரோ பகுதியில்

ஒன்ராரியோ, ஜூன் 22

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் நகரமொன்றில் அமைந்துள்ள வீடொன்றில் ஒரு குடும்பத்தில் 4 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு ஒன்றாரியோவின் ஹரோ பகுதியில் - வின்ஸருக்கு சற்றுத் தெற்கே - இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது அந்தப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழந்தவர்கள் இளம் தம்பதியும், அவர்களது மகனும், மகளும் ஆவர் என்று எசெக்ஸ் நகர முதல்வர் ஷெரி பொண்டி தெரிவித்தார்.

கற்பனை செய்து பார்க்க முடியாத துயரச் சம்பவம் என பொலிஸார் இந்தச் சம்பவத்தை விவரித்துள்ளனர்.

வியாழக்கிழமை 1:30 மணி அளவில் County Road 13 என்ற இடத்தில் உள்ள வீட்டிற்கு அழைக்கப்பட்ட காவல்துறையினர் அங்கு நான்கு உடல்களைக் கண்டறிந்தனர்.

Ontario Provincial Police (OPP) குற்ற விசாரணை நடத்தி வருகிறது. குடும்பத்தினர் அடையாளம் மற்றும் இறப்புக்கான காரணம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இறப்புக்கான காரணத்தை கண்டறிய பிரேத பரிசோதனை லண்டனில் நடத்தப்படவுள்ளது.

இந்த மரணங்கள் சந்தேகத்திற்கிடமையானவையா அல்லது விபத்தா என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த சம்பவத்தினால் பொதுமக்களது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்கள் கிடையாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவத்தால் நகரமே சோகத்தில் மூழ்கியுள்ளது, நகர சபைக் கட்டடங்களில் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

மேலும், ஞாயிற்றுக்கிழமை மாலை ஹரோ சாக்கர் மைதானத்தில் மெழுகுவர்த்தி ஏந்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தகவல் இருப்பவர்கள் காவல்துறையினரை தொடர்பு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## திங்களன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாத அளவில் பொது தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது.

இடைத்தேர்தல முடிவுகள் மக்களின் மெய்யான பிரதிபலிப்பாக அமையும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

சென் போல்ஸ் தொகுதி நீண்ட காலமாக லிபரல் கட்சியின் ஆதிக்கத்தில் காணப்படுகின்றது.

திங்கட்கிழமை நடைபெற உள்ள இடைத்தேர்தலிலும் அக்கட்சி வெற்றி பெறும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், Ipsos நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் கன்சர்வேட்டிவ் கட்சி 42 வீதமான வாக்குகளை பெற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, கனடிய பிரதமரும் லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ மீதான மக்களின் ஆதரவு பலவீனமடைந்து வருவதாகவும் இது லிபரல் கட்சியின் ஆதரவினை பெருமளவு பாதிக்கும் எனவும் கருத்து கணிப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது.

## முகநூல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது வங்கி அட்டை இலக்கம் மற்றும் கடவுச்சொல் என்பனவற்றை வழங்கியதன் பின்னர் வங்கி அட்டை ஹேக் செய்யப்பட்டு இவ்வாறு பணம் மோசடி செய்யப்பட்டதாக அவர் தெரிவிக்கின்றார்.

நபர்களின் விவரங்களை களவாடி இவ்வாறு பண மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் துப்பாக்கி சூடு! ஒருவர் பலி; மூவர் காயம்!!

கனடாவின் வொஹானில், நொவா டிரைவ் என்ற இடத்தில் உள்ள ஒரு வீட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அளவில் நடந்த இந்த சம்பவம், வூட் பிரிட்ஜ் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யோர்க் பிராந்திய காவல்துறை அதிகாரிகள் இந்தத் தாக்குதல் குறிவைக்கப்பட்ட மற்றும் தனிப்பட்ட ஒன்று என்றும், பொதுமக்களுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் நம்புகின்றனர்.

ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வீட்டில் வசிப்பவர்களுக்கும் இடையிலான உறவு குறித்து எந்த விவரங்களையும் அவர்கள் வழங்கவில்லை.

இந்தத் துப்பாக்கிச் சூடு பரபரப்பான நேரத்தில், குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் நேரத்திலும், பகுதி மக்கள் வெளியே சென்று கொண்டிருந்த நேரத்திலும் நடந்துள்ளது.

எனவே இந்த தாக்குதல் குறித்து விவரம் தெரிந்த யாரேனும் இருந்தால் முன்வந்து தகவல் வழங்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார், குறைந்தது ஒரு சந்தேக நபரை தேடி வருகின்றனர். ஆனால் இதுவரை எந்த விவரங்களும் வெளியிடப்படவில்லை.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மேலும் இருவர் தீவிரமான, ஆனால் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மூவரும் காயங்களுடன் இல்லத்தில் காணப்பட்டனர் எனவும், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# திருடப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் பொலிஸாரின் விசாரணையில் மீட்கப்பட்டுள்ளன


ஒன்ராரியோ, ஜூன் 22

சேர்விஸ் ஒன்ராரியோ ஊழியர் தொடர்புடைய வாகனத் திருட்டு விசாரணையில் திருடப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணையில் நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர் என டொரன்டோ பொலிஸார் அறிவித்துள்ளனர்.

புரொஜக்ட் போச்சர் என பெயரிடப்பட்ட இந்த விசாரணையில் கைதானவர்களுக்கு எதிராக மொத்தம் 28 குற்றச் சாட்டுக்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் சேர்விஸ் ஒன்ராரியோ ஊழியர் ஒருவரைத் தொடர்புபடுத்தியதாக ஒரு மாத காலம் இந்த வாகனத் திருட்டு தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.




மீட்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி 9.5 மில்லியன் டொலர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் இதுவரை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.




# மூடப்படுகின்றது ஒன்ராரியோ அறிவியல் மையம் கட்டமைப்புச் சிக்கல்கள் காரணம் என அறிவிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 22

ஒன்ராரியோ அறிவியல் மையம் கட்டமைப்புச் சிக்கல்கள் காரணமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஒன்ராரியோ அறிவியல் மையத்தை பொதுமக்கள் பாவனைக்கு நிரந்தரமாக மூட முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் ஜூன் 21ஆம் திகதி இந்த முடிவை அறிவித்துள்ளது.

இந்த முடிவு ஒன்ராரியோ அறிவியல் மையத்தின் பார்வையாளர்கள், ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என மாகாண உட்கட்டமைப்பு அமைச்சர் கிங்கய சுர்மா தெரிவித்துள்ளார்.

அண்மைய பொறியியல் அறிக்கையில் கட்டடத்தில் அடையாளம் காணப்பட்ட தீவிரமான கட்டமைப்பு சிக்கல்கள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ அறிவியல் மைய கூரைக்கு ஏற்பட்ட சேதம் பொறியியல் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட படங்களில் காட்டப்பட்டுள்ளது.

1969 இல் திறக்கப்பட்ட அறிவியல் மையம் எதிர்வரும் குளிர்காலத்தில் கூரையில் செயல் இழக்கும் அபாயம் உள்ளதாக பொறியியல் நிறுவனம் ரிம்கஸ் கன்சல்டிங் குரூப் தெரிவித்துள்ளது.

இந்த மக்கள் சுற்றுலாத் தலத்தில் உள்ள அருங்காட்சியகத்தை வெள்ளி முதல் பார்வையிட முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வார இறுதியில் இடம் பெறுவதற்கு திட்டமிடப்பட்ட தனிப்பட்ட நிகழ்வுகள் தொடர அனுமதிக்கப்படுகிறது.

# ஆபத்தான இளைஞனைத் தேடி தேசியப் பொலிஸார் வலைவீச்சு

நோவா ஸ்கோச்சியா, ஜூன் 22

கனடாவின் நோவா ஸ்கோச்சியா பகுதியில் ஆபத்தான 26 வயது இளைஞரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

நோவா ஸ்கோச்சியாவின் கிழக்குக் கரையோரத்தின் மேற்கு பெட்பெஸ்விக் பகுதியில் 26 வயதான பிராண்டன் க்ராஃபோர்ட் கிராண்ட் என்ற இளைஞரை கனடிய தேசிய பொலிஸார் தேடி வருகின்றனர்.

காரணமின்றி தப்பி ஓடியதற்காக கிராண்ட் மீது மாகாணம் முழுவதும் பிடிவாறந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை இரவு, சுமார் 9:30 மணியளவில், வெஸ்ட் பெட்பெஸ்விக் வீதியில் உள்ள ஒரு வீட்டில் மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு மனிதர் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இறுதியில் அந்த நபர் கிராண்ட் தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர் வீட்டை கோடரியால் சேதப்படுத்தி விட்டு காட்டுக்குள் அவர் ஓடி விட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# ஹெய்ட்டியில் வன்முறைக் கும்பல்களின் 3 தலைவர்களுக்கு கனடா தடை விதிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 22

ஹெய்ட்டியில் மோசமடைந்து வரும் வன்முறையில் ஈடுபட்டமைக்காக மேலும் மூன்று பேர் மீது கனடா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

ஜூன் 22ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜோலி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

லக்சன் எலான், கேப்ரியல் ஜீன்-பியர் மற்றும் ஃபெர்டென்ஸ் டைலஸ் ஆகிய கும்பல் தலைவர்கள் ஹெய்ட்டியின் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளனர் என்று கனடா வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்றுவரை, கனேடிய அரசாங்கம் சுமார் 400 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளதுடன், 31 ஹெய்ட்டி குடிமக்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

இந்த வார தொடக்கத்தில் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை, மார்ச் மாதத்திலிருந்து மட்டும் கும்பல் நடவடிக்கையால் கிட் டத்தட்ட 580,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று கூறுகிறது.

கென்யா கரீபியன் நாட்டில் வன்முறையை அடக்குவதற்கு ஐ.நா. ஆதரவுடன் சர்வதேச அமைதி காக்கும் பணிக்கு தலைமை தாங்க உள்ளது.

# மில்லியனர் மில்லர் மீதான பாலியல் வழக்கு; கியூபெக் உயர் நீதிமன்ற நீதிபதி கடும் பிடி!




கியூபெக், ஜூன் 22

பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட கியூபெக் பில்லியனரான தொழிலதிபர் அடுத்த மாதம் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத அளவுக்கு உடல்நிலை சரியில்லாமல் படுக்கையில் இருக்கின்றார் என அவரது சட்டத்தரணிகள் வாதிட்ட போதிலும் வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க கியூபெக் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் மறுத்து விட்டார்.

உலகளாவிய மின்னணு விநியோகஸ்தர் ஃபியூச்சர் எலக்ட்ரானிக்ஸின் நிறுவனர் ரொபர்ட் மில்லர், 1994 மற்றும் 2016க்கு இடையில் குற்றம் சாட்டப்பட்ட குற்றங்கள் நடந்தபோது, அவர்களில் பலர் சிறுவர்களாக இருந்த 10 முறைப்பாட்டாளர்கள் சம்பந்தப்பட்ட 21 பாலியல் குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டார்.

80 வயதான மில்லர் படுத்த படுக்கையாக இருக்கிறார் எனவும், பார்கின்சன் நோயின் பாதிப்பால் அவரது உடல்நிலை மோசமடைந்துள்ளதால், விசாரணையில் பங்கேற்கவோ அல்லது தன்னைத் தானே தற்காத்துக் கொள்ளவோ முடியவில்லை எனவும் மில்லரின் வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

தனது தீர்ப்பில், ஜூலை 3 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராவதன் மூலம் மில்லரின் உரிமைகள் மீறப்படும் என்ற தற்காப்புக் கூற்றின் அவசரத் தேவையால் அவர் நம்பவில்லை என்று நீதிபதி பிரான்சுவா தாதூர் கூறுகிறார்.

வருங்கால நடவடிக்கைகளில் சில மில்லர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய அவசியமில்லை அல்லது குற்றச்சாட்டுகளை எதிர்க்க வேண்டும் என்று டாடூர் கூறுகிறார்.

# ரொரன்றோவில் சூறையாடப்பட்ட 6,600 தங்கக் கட்டிகளும் எங்கே?

## ஓராண்டு கடந்தும் விடை கிடைக்கவில்லை

திரைப்பட பாணியில் கனடா பியர்சன் விமான நிலையத்தில் சூறை யாடப்பட்ட 6,600 தங்கக் கட்டிகள் எங்கே என்னும் கேள்விக்கு இன்று வரை பதிலில்லை!

2023ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி, சுவிட்சர்லாந்தின் சூரிச்சி லுள்ள வங்கி ஒன்றிலிருந்து கனடா வின் ரொரன்றோவுக்கு இரண்டு பார் சல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அவற்றின் மீது 'பணம் மற்றும் தங்கக்கட்டிகள்' என குறிப்பிடப்பட் டிருந்திருக்கிறது. கனடாவின் ரொரன்றோ விமான நிலையத்திலுள்ள சரக்குகள் சேமிப்பகத்தில் அந்தப் பார்சல்கள் வைக்கப்பட்டிருந்திருக்கின்றன.

சிறிது நேரத்தில், தக்க ஆவணங் களுடன் வந்த ஒருவர் அந்த பார்சல் களை தனது ட்ரக்கில் ஏற்றிக்கொண்டு சென்றுள்ளார். அன்று இரவு 9.30 மணியளவில், அந்த பார்சல்களைப் பெற்றுக்கொள்ள வேறு சிலர் வந் துள்ளார்கள். அவர்கள் அந்த பார் சல்களுக்கான ஆவணங்களைக் கொடுக்க, அப்புறம்தான் தெரியவந்தது, ஏற்கனவே வந்த நபர்கள் மோசடி யாளர்கள் என்பது.

2023ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இந்த சூறையாடல் சம்பவம் நடந்தது. ஆனால், அபகரிப்பு நடந்து ஓராண்டு ஆகியும் அந்த 6,600 தங்கக் கட்டிகள் என்னவாயின என்பது இதுவரை தெரியவரவில்லை.

ஓராண்டு அமைதியாக இருந்த கனடா பொலிஸார், திடீரென பிரம் மாண்டமான ஊடகவியலாளர்கள் சந்திப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்தார் கள். சூறையாடல் சம்பவம் தொடர்பில் தாங்கள் 9 பேரைக் கைது செய்துள்ள னர் என்வும், சந்தேக நபர்கள் மூன்று பேரை தேடிவருகின்றனர் எனவும் தெரிவித்தார்கள்.









ஆனால் அபகரிக்கப்பட்ட தங்கக்கட் டிகள் எங்கே என்ற கேள்விக்கு யாரிட மும் சரியான பதிலில்லை!

அவை உருக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் கூற, அவர்கள் கூற்றுக்கு ஆதரவாக ஒரு விடயம் நடந்தது. அமெரிக்காவின் பெனிசில் வேனியா நெடுஞ்சாலையில் பிடிபட்ட ஒரு ட்ரக்கில் 65 துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆக, அந்தத் தங் கத்தை உருக்கி விற்று மோசடியா ளர்கள் துப்பாக்கிகள் வாங்கிவிட்டனர் என கூறினார்கள் பொலிஸார்.

ஆனால், அவர்கள் கூறும் கணக்கு இடிக்கிறது. அதாவது அகரிக்கப்பட்டது 400 கிலோ தங்கம். இன்றைய நிலை வரப்படி அதன் மதிப்பு சுமார் 41 மில்லியன் டொலர்கள்.

பொலிசார் 65 துப்பாக்கிகளை கைப்பற்றியுள்ளார்கள், ஒரு துப்பாக் கியின் விலை சுமார் 500 டொலர்கள். அப்படியானால், 65 துப்பாக்கிகளின் விலை சுமார் 34,000 டொலர்கள். ஆக, மீதி பணம் எங்கே? அதாவது, மீதி தங்கம் எங்கே?

கனடா பொலிஸாரிடம் இந்தக் கேள்விகள் எதற்கும் பதிலில்லை. தங்கம் இங்கே இருக்கலாம்,அங்கே இருக்கலாம், அந்த நாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என கூறுகிறார்களேயொழிய, தங்கம் என்ன ஆனது என்ற கேள்விக்கான சரியான பதில் யாருக்கு தெரியும் என்பதே தெரியவில்லை!

